# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

# DEPOSITION OF WITNESS

O.S.No.92/2020

**CNR.No.TNCB19000**

Date,18.08.2025 DW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சஞ்சீவ்குமார் | **வயது** | 30 |
| த/பெ | ராஜப்பன் | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | காரமடை, டி.ஜீ.புதூர் | **மாவட்டம்** | கோயமுத்தூர் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 18th August 2025

பி.வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நானும் எனது தகப்பனாரும் சேர்ந்துதான் எதிர்வழக்குரை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு எத்தனை மூத்த சகோதரிகள் என்றால் ஒருவர் மட்டும்தான். அவருடைய பெயர் பாப்பாத்தி. கிரைய ஆவண எண்.147/1961 கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களை ராமைய கவுடர் விற்பனை செய்யும்போது பாப்பாத்தியும் அவரது குடும்ப உறுப்பினர்களில் ஒருவராக இருந்தார் என்றால் சரிதான். கிரைய ஆவண எண். 167/1961 ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களை கிரையம் பெறும்போது பாப்பாத்தி குடும்பத்தில் ஒருவராக இருந்தார் என்றால் சரிதான்.

ரங்கசாமி ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணம் எண்.1/1970 -ல் எனது தகப்பனார் தரப்பினராக இல்லை என்றால் சரிதான். 167/1961 கிரைய ஆவணத்தை ரங்கசாமி பெயரிலும் ராஜப்பன் பெயரிலும் கூட்டாக பெறப்பட்டது என்றால் சரிதான். 1/1970 கிரைய ஆவணத்தை ரங்கசாமி கவுடர் தன்னிச்சையாக தனிப்பட்டமுறையில் மாதைய கவுடருக்கு ஏற்படுத்திக் கொடுத்தார் என்றால் சரிதான். 1/1970 கிரைய ஆவணம் ஏற்படுவதற்கு முன்பே மாதைய கவுடருக்கும் ரங்கசாமிக்கும்

அவர்களுக்குள் கடன் பரிவர்த்தனை இருந்தது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மாதைய கவுடர் தாவா சொத்தின் சுவாதீனத்தில் தற்போது இல்லை என்றால் சரிதான் விற்பனை செய்து விட்டார். எனது தாத்தா ரங்கசாமி கவுடர் கிரைய ஆவண எண்.1/1970 கிரைய பத்திரத்தின்படி எவ்வளவு சொத்தை கிரையம் செய்து கொடுத்திருக்கிறார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும் 2 ஏக்கரா.

முதல் விசாரணை வாக்குமூலம் பக்கம் 2-ல் 5-வது லைனில் எனது தந்தை 1ம் பிரதிவாதியின் தகப்பனார் ரங்கசாமி கவுடர் அவரது சரிபாதி பங்கினை அதாவது 2.32 ஏக்கர் நிலத்தை 3 ம் பிரதிவாதிக்கு விற்கிரையம் செய்து விட்டார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். 2 ஏக்கர் விற்பனை செய்தார். கிரைய ஆவணம் 1/1970 அடிப்படையில் மாதைய கவுடர் அவர்கள் சுவாதீனத்தில் இருந்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. கிரைய ஆவணம் 1/1970 க்கு பின்னிட்டு எனது தகப்பனார் ராஜப்பனுக்கும் மாதைய கவு டருக்கும் இடையே தாவா சொத்து தொடர்பாக ஆவணம் எதுவும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

முதல் விசாரணை வாக்குமூலத்தில் பக்கம் - 2 ல் எனது தந்தை/1ம் பிரதிவாதி தனது பங்கான 2.32 ஏக்கர் நிலத்தை தனிப்பட்ட முறையில் அடைந்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து முழுவதும் கூட்டுக்குடும்பமாகதான் அனுபவித்து வந்தது என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் எனக்கு செட்டில்மெண்ட் எழுதி வைக்க எனது தகப்பனாருக்கு சட்டப்படி உரிமை கிடையாது என்று சொன்னால் சரியல்ல. எனது பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா. ஆ. 9 ல் 2.58 ஏக்கர் எனது தகப்பனார் எழுதி வைத்ததாக கண்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

தாவா சொத்து கூட்டு சுவாதீனத்தில் இருந்ததால்தான் முன்னுக்குபின் முரணாக ஆவணங்களை ஏற்படுத்தி உள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ. 9 செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனது தகப்பனாருக்கும் எனது தாத்தாவிற்கும் பாகப்பிரிவினை செய்து கொண்டதாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். ஏற்கனவே விற்பனை செய்ததால் குறிப்பிடவில்லை. வாதிகளின் உரிமைகளை மறைத்து 1/1970 மற்றும் வா.சா. ஆ 9 செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும் அந்த

ஆவணங்கள் செல்லாது என்று சொன்னால் சரியல்ல.

தாவா சொத்தில் வாதிகள் பங்குரிமை பெற்று விடக்கூடாது என்ற காரணத்தினால் அவசர கதியில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கருகில் கனகராஜ் என்பவர் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கு மேற்கு எல்லையில் உள்ள உரிமையாளர் பெயர் என்ன என்றால் அவரை தெரியும் ஆனால் பெயர் தெரியாது என்று கூறிவிட்டு ஜெயக்குமார் என்று கூறுகிறார். தாவா சொத்தின் தெற்கு பகுதியில் யார் இருக்கிறார் என்றால் அது ரோடு. கிழக்கு பகுதியில் செந்தில்குமார் என்பவரின் பூமி உள்ளது.

கனகராஜ் என்பவர் தாவா சொத்தின் அருகில் விவசாயம் செய்து வருகிறார் என்றும் அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. திம்மண்ண கவுடர் புதூரில் உள்ள சொத்து எனது தாத்தாவின் சுய சம்பாத்திய சொத்து என்றால் அது எனது தாத்தா பெயரில் இருந்தது. அதை அவரது 2-வது மகனுக்கு எழுதி வைத்து விட்டார். திம்மண்கவுடர்புதூரில் உள்ள சொத்து பூர்வீக சொத்து என்று சொல்வது தவறானது என்றால் சரியல்ல. தாவாப்படி வாதிகளுக்கு சட்டப்படி பாகம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. வாதிகள் தற்போதும் கூட்டு சுவாதீனத்தில்தான் இருந்து வருகிறார்கள் என்றும் அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை -</u> அனுமதிக்கப்படுகிறது

எனது அத்தைகள் தாத்தாவின் வீட்டில் திருமணம் ஆகும் வரை கூட்டுக்குடும்பமாக இருந்து வந்தார்கள்.

<u>மறு குறுக்கு விசாரணை -</u>

எனது தாத்தாவின் வீடு 1664/1979 கிரைய ஆவணத்தின்படிதான் எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1664/1979 கிரைய ஆவணத்திற்கு முன்பு எனது தாத்தா மற்றும் அத்தைகள் ஆகியோர்கள் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தார்கள் என்றால் எனது அப்பாவை தவிர அனைவரும் கூட்டாக வசித்து வந்தார்கள். எனது முதல் விசாரணை வாக்குமூலத்திலோ எதிர் வழக்குரையிலோ எனது அப்பாவும் அத்தைகளும்

தனித்தனியாக வசித்து வந்ததாக சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் பங்கு கொடுத்துவிடக்கூடாது என்பதற்காக பின்யோசனை செய்து நீதிமன்றத்தில் முதல்முறையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 147/1961 கிரைய ஆவணத்தின்படி ராமைய கவுடர் விற்பனை செய்யும் வரை ராமைய கவுடர்., ரங்கசாமி கவுடர், பாப்பாத்தி ஆகியோர்கள் அனைவரும் கூட்டுக்குடும்பமாகதான் இருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு கூட்டுக்குடும்ப சொத்தை பொருத்து எனது தாத்தா ரங்கசாமி கவுடரும் எனது தகப்பனார் ராஜப்ப கவுடரும் பதிவு ஆவணங்களை ஏற்படுத்த சட்டப்படி எந்த ஒரு உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.08.18 20:15:02 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.